**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**
முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**
சார்பு நீதிபதி, ஆரணி,
2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாள் சனிக்கிழமை
**I.A.No.06/2025 in O.S.No.88/2022**
**TNTM 03000212/2022**

M.சங்கர் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

K.ஆறுமுகம் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 22.09.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன்,M.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R..ராஜன், M.A.B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பிரசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் 24.10.2024ம் தேதியன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து, மீண்டும் வழக்கினை கோப்பிற்கு எடுக்க உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் அசல் வழக்கை எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார். மனுதாரர் மேற்படி அசல் வழக்கை மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஏழுமலை என்பவரை வைத்து நடத்தி வந்தார். மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை (Proof Affidavit) தாக்கல் செய்யப்பட்டது. அதன்பிறகு மேற்படி வழக்கை நடத்திவந்த மனுதாரர் வழக்கறிஞர் அவர்கள் குறுக்கு விசாரணையின் போது வாய்தா தேதி தெரிவிப்பதாகவும், அப்பொழுது நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று கூறியிருந்தார். மனுதாரர் மேற்படி வழக்கறிஞர் மனுதாரருக்கு வாய்தா தேதி தெரிவிப்பார் என்றும், தெரிவித்தபிறகு நீதிமன்றத்திற்கு செல்லலாம் என்று இருந்தார். இவ்வாறான சூழ்நிலையில் மேற்படி அசல் வழக்கிலிருந்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்திருந்த I.A.No.3/2024 என்ற மனுவும், மேற்படி மனுவில் நான் 08.01.2025 அன்றைய வாய்தா தேதியன்று ஆஜராக வேண்டும் என்று குறிப்பிட்டு நீதிமன்றத்திலிருந்து நோட்டீஸ் கிடைக்கப்பெற்றது.

2. மேற்படி I.A.No.3/2024 என்ற மனுவும், நோட்டீஸ் இவைகளை வழக்கறிஞர் அவர்களிடம் காண்பித்து கேட்டபோது, மேற்படி அசல் வழக்கில் 24.10.2024 அன்றைய தேதியில் குறுக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாததால், மேற்படி வாய்தா

தேதியன்று ஒருதலைபட்சமாக தள்ளுபடி செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேலும், தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்துசெய்ய வேண்டி கட்டளை 9 விதி 9 மனு தாக்கல் செய்யப்பட்டு, அவை திருப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மனுதாரர் மேற்படி வழக்கறிஞர் அவர்களிடமிருந்து மனுதாரர் வழக்கு கட்டினையும் திருப்பப்பட்ட கட்டளை 9 விதி 9 மனுவையும் திரும்ப பெற்றுக்கொண்டார். அதன்பிறகு மனுதாரர் தரப்பில் வேறு ஒரு வழக்கறிஞர் அவர்களை வைத்து திருப்பப்பட்ட மனுவில் கூறியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தற்போது இம்மனுவை மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

3. மேலும், மேற்படி அசல் வழக்கின் 24.10.2024 தேதியிட்ட குறுக்கு விசாரணை வாய்தாவானது மனுதாருக்கு தெரியாது. தெரிந்திருந்தால் கண்டிப்பாக கனம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பார். மனுதாரர் மேற்படி வாய்தா தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை நடத்தாமல் போனது மேற்படி தவறுதலே, தவிர வேறு ஒன்றுமில்லை. மேற்படி தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமானது. மன்னிக்கத்தக்கது. மேற்படி அசல் வழக்கில் தள்ளுபடி செய்யப்பட்ட உத்திரவினை இரத்து செய்து மீண்டும் கோப்பிற்கு எடுக்காவிட்டால் மனுதாரருக்கு அநேக கஷ்ட, நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். மேற்படி அசல் வழக்கில் மனுதாரருக்கு வெற்றி பெறக் கூடிய அம்சங்கள் நிறை உள்ளது என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

4. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

மனுதாரர் பரம் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு அபிடவிட் சங்கதிகள் யாவும் உண்மையல்ல. மேற்படி நெம்பர் தாவாவை 2022ம் வருடம் வாதி/மனுதாரர் தாக்கல் செய்து அபிடவிட் தாக்கல் செய்து குறுக்கு விசாரணை செய்ய பல வாய்தாக்கள் போடப்பட்டு 22.11.2022 அன்று வராததால் 22.11.2022ல் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் மனுதாரர்/வாதி தாவாவை ரெஸ்டோர் செய்ய I.A.No.2/2024 என தாக்கல் செய்து 06.09.2024ல் ரெஸ்டோர் செய்யப்பட்டு பல வாய்தாக்கள் போடப்பட்டு மீண்டும் பல வாய்தாக்கள் வராததால் 24.10.2024ல் மனுதாரருக்கு எதிராக 2வது தடவை தாவாவை தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் சுமார் 2 வருடம் தாவா தாக்கல் செய்யவும் சுமார் 2 வருடம் தாவாவை விசாரணை செய்வதில் எந்தவிதமான விருப்பம் இல்லாமல் உள்ளார். மேலும் தாவா தாக்கல் செய்து விசாரணை செய்வதில் விருப்பம் இல்லாமல் 2 தடவை தாவாவை தள்ளுபடி செய்ய விட்டுவிட்டு தற்போது வந்து தாக்கல் செய்யப்பட்ட மனுசட்டப்படி ஏற்கக்கூடியதல்ல. மேலும் மனுதாரருக்கு தாவா நிலுவையில் இருக்கும்போது விவரம் வந்து வழக்கறிஞரை கேட்டு தெரிந்து கொள்ளாமல் விட்டுவிட்டு வழக்கறிஞர் தகவல் சொல்லவில்லை எனச் சொல்வது ஏற்கக்கூடியதல்ல. மேலும் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த I.A.No.3/2024ல் சம்மன் வந்த பின்னர்தான் தாவா தள்ளுபடி ஆன விவரம் தெரியும் என்பது ஏற்கக்கூடியதல்ல. மேலும் மனுதாரர் பொய்யான ஆவணம் முன்னிலைக்கு தாவாவை தாக்கல் செய்துவிட்டு இந்த எதிர்மனுதாரரை இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு சட்டப்படி ஏற்கக் கூடியதல்ல. எனவே மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

5. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

6. **<u>தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டபோது அளிக்கப்பட்ட முன்பணத்தை வசூல் செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி வா.சா.1 ஆக முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்தபிறகு குறுக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாததால், வாதியின் வருகையின்மையினால் அசல் வழக்கு கடந்த 24.10.2024 தேதியன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவானது 22.11.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்த பிறகு மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு வருவதற்கான வாய்தா தேதியை தெரிவிப்பதாக கூறியிருந்தார். இதனிடையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.3/2024 என்ற மனுவை 08.01.2025ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என்று அறிவிப்பு கிடைத்த பிறகு வழக்கறிஞரை சந்தித்தபோது குறுக்குவிசாரணைக்கு கடந்த 24.10.2024ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை தெரிவித்தார். அதன்பிறகு அந்த வழக்கறிஞரிடம் இருந்து வழக்கு கோப்புகளை நான் பெற்றுக்கொண்டு வேறு வழக்கறிஞர் மூலம் இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், 24.10.2024ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் போனது வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல. அசல் வழக்கில் எனக்கு ஜெயிக்கக்கூடிய அம்சங்கள் உள்ளது என்று கூறி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், அசல் வழக்கில் ஏற்கனவே 22.11.2022ம் தேதி தவறுகைக்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அசல் வழக்கில் வாதி குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாததால் 24.10.2024ம் தேதி மீண்டும் 2வது முறையாக வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்கு விசாரணை செய்வதில் மனுதாரருக்கு விருப்பம் இல்லை என்பதால் 2 முறை வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டார். வழக்கறிஞர் விவரம் சொல்லவில்லை என்று கூறியிருப்பது ஏற்புடையதல்ல. இ.ம.எண்.3/2024 அறிவிப்பு வந்த பிறகு தான் தள்ளுபடி ஆன விவரம் தெரியவந்தது என்று கூறுவது ஏற்கும் வகையில் இல்லை. எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

8. அசல் வழக்கில் வாதி தரப்பில் முதன்மை விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.1 ஆக 14.09.2023ம் தேதி விசாரிக்கப்பட்டுள்ளார். அதன்பிறகு வாதி குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாததால், 22.11.2023ம் தேதி வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பிறகு இ.ம.எண்.2/2024ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டு, மீண்டும் வாதி குறுக்கு

விசாரணைக்கு ஆஜராக 13.09.2024 முதல் 24.10.2024 வரை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வாதி குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாததால் 24.10.2024ம் தேதி 2வது முறையாக இவ்வழக்கை தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு ஆஜராக தனக்கு வாய்தா தேதியை தெரிவிக்கவில்லை என்பதால், தன்னால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று மனுதாரர் கூறியிருப்பது ஏற்கும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும், மனுதாரருக்கு தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பினை அளிப்பது இயற்கை நீதியின்பால் அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்த பிறகு குறுக்கு விசாரணைக்கு ஆஜராக பல வாய்ப்புகள் அளித்தும் ஆஜராகவில்லை என்பது தெரியவருகிறது. எனவே இந்த மனு எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ரூ.1,000/-த்தை வருகின்ற 10.11.2025 தேதிக்குள் செலுத்தவேண்டும் என்றும், செலுத்த தவறினால் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும். அழைக்கா வாய்தா 11.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKAREN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.11.01 17:34:46 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** இல்லை
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்** இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.11.01 17:34:54 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.